யாழ்ப்பாணம்

ஆனையிறவு பாதையை திறக்க புலிகள் உதவினால் பொருளாதார தடை நீக்கப்படும்-ரணில் அறிவிப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 10 இதழ் 12
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-2-1994

(தொழும்பு)

ஆனையிறவுப் பாதையை ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக திறக்க விடுதலைப் புலிகள் சம்மதித்தால் வடபகுதிமீது விதிக்கப்பட்ட பொருளாதார தடையை அரசு நீக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தொழும்பில் நேற்றுக் காலை வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனை அறிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் பேச்சுவார்த்தையில் பங்கேற்பாரேயானால் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்.குடாவுக்குள் எப்படியும் நுழையலாம்

(தொழும்பு)

யாழ்ப்பாணத்துக்குள் இராணுவம் நுழையவேண்டுமானால் அதற்கு பல பாதைகள் உண்டு ஆனையிறவுப் பாதையினூடாகத்தான் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இராணுவத்துக்குக் கிடையாது இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப் பாதை திறப்பது சம்பந்தமாக பிரதமர் ரணில் மேலும் தெரிவிக்கையில்,

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய மீனவர் பாதுகாப்பு கருதி கச்சதீவைத் திரும்பப் பெற தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி!

மத்திய அரசுக்கும் நெருக்கடி

(லண்டன்)

இலங்கையின் எல்லைக்கு உட்படுத்தப்பட்ட கச்சதீவை மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ள தமிழக அரசு தற்போது தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. இந்திய மீனவர்களின் பாதுகாப்பு கருதியே தமிழக அரசு கச்சதீவு விவகாரத்தில் இப்போது தீவிரகவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கையிடமிருந்து நஷ்டஈடு

(தொழும்பு)

ஸ்ரீலங்கா கடற்படையினர் மூலம் துப்பாக்கிப்பிரயோகத்தால் கொல்லப் செய்யப்பட்ட அல்லது காயப்படுத்தப்பட்ட இந்திய மீனவர்களுக்கு ஸ்ரீலங்கா அரசிடமிருந்து பெருமளவு நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் இவ்வாறான கோரிக்கை

(4ம் பக்கம் பார்க்க)

இந்தியாவுடன் தொடர்பு

(தொழும்பு)

இலங்கை-இந்திய மீனவர்களின் தொடர்பான பிரச்சனைகளை திரும்பத் திரும்ப நிகழாமல் தடுப்பதற்குத் தீர்வு ஒன்றைக் காணுமுகமாக, இந்தியாவுடன் இலங்கை தொடர்பு கொண்டுள்ளது.

நேற்று கொழும்பில் செய்தியாளர் மத்தியில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: அதிவிரைவு ஜெற் படகுகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதால்

(4ம் பக்கம் பார்க்க)

ராவுக்கு ஜெயலலிதா கடும் நெருக்குதல்

(சென்னை)

இலங்கை கடற்படையினராக தமிழக மீனவர் இருவர் கண்மூடித்தனமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் இலங்கை அரசிடம் வன்மையான கண்டனம் தெரிவிக்கவேண்டுமென தமிழக முதல்வர் ஜெயலலிதா கடுமையாக வற்புறுத்தியுள்

(4ம் பக்கம் பார்க்க)

● கர்னல் மூலம் வடபகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்ப முன்னுரிமை அளிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கு வரும் எல்லா கப்பல்களிலும் உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு அந்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு விசேட வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். அரச அதிபர் வ. மாணிக்கவாசகர் வெளியிடுவதாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் படுகின்றதாவது: விற்பனைக்கு விடப்படும் உணவுப் பொருள்களுக்கு

4ம் பக்கம் பார்க்க)

ஆயுதக் கொள்வனவு: இலங்கை அரசுடன் பேச சீன அமைச்சர் வருகிறார்

(தொழும்பு)

இராணுவ ஆயுதக்கொள்வனவு பற்றி பேச்சுக்கள் நடாத்துவதற்கு சீனவெளியுறவு அமைச்சர் கிஷன் கிச்சின் அடுத்தவாரம் கொழும்பு வருகிறார்.

சீனாவிலிருந்து 500 கோடி ரூபாவுக்கு மேலான ராணுவ ஆயுதங்கள் கடந்த வாரம் கப்பல் மூலமும், விமானங்கள் மூலமும் அவசர அவசரமாக கொழும்புக்கு வந்துள்ளது தெரிந்ததே.

இலங்கைக்கு வேண்டிய இராணுவ ஆயுதங்கள் கனரக வாகனங்கள் யுத்த டாங்கிகள் பற்றி இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடாத்துவதற்காகவே சீன வெளியுறவு அமைச்சர் இலங்கை வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வி-இ

பூநகரி விவகாரம்: படையினர் உயிர்ப்பலி சிங்களவர் மத்தியில் கவலை

(தொழும்பு)

பூநகரியில் படையினர் தமது உயிர்களை பலி கொடுத்தது தெற்கில் உள்ள சதிகாரர்களை வாய்பாற்றவா என சிங்கள மக்கள் விசனம் வெளியிட்டுள்ளதாக பிரபல சிங்கள பத்திரிகையான லாசிபவ்ராஜகருண நாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகை ஒன்றில் ஜனநாயகத்தை அழிக்கும் நடவடிக்கையில் அரசு இறங்கிவிட்டது'' என்ற

(4ம் பக்கம் பார்க்க)

கோமாரியில் இராணுவத்துக்கும் உணவுப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

கோமாரி கடற்கரையில் யாழ். மாவட்டத்திற்கான 403 நபர்ப் பொதிகள் உள்பட உணவுப் பொருள்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு டீசல், மண்ணெண்ணை போன்றவையும் எடுத்துவரப் படுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

அத்தியாவசியப் பொருள்கள் பற்றிய அரச அதிபர் கடிதத்துக்கு அரசு மௌனம் சாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவுக்கு கிறிஸ்மஸ் அரிசி அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாகத் நாம் அனுப்பிய கடிதம் குறித்து அரசு மௌனம் சாதித்து வருவதாக யாழ். அரச அதிபர் வ. மாணிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வரிவிளம்பரம்

நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். பி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி 739

25 வருட அனுபவம்

இருபத்தைந்து வருட அனுபவமுள்ள அனுபவசாலியின் மேற்பார்வையில் சகல பழைய, புதிய, சுவர் மணிக்கூடுகள், கேசை மணிக்கூடுகள் உத்தரவாத த்துடன் குறைந்த செலவில் திருத்தித் தரப்படும். டிக்கர் வாச் அன் றேடியோ வேக்ஸ், 281, ஸ்ரான்லி வீதி, (வரவிக் கூப்பாரி அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (எ 5842)

வர்ண வேலைகள்

விளம்பரப் பலகை, இலக்கத் தகடுகள், மனித உருவப் படங்கள், கடைவர்ணம் தீட்டுதல், வீடுகள் வர்ணம் தீட்டுதல், கோவில்கள் வர்ணங்கள், சாமி உருவப்படங்கள் ஆகிய வர்ண வேலைகளும் குறித்த தவணையில் ஒடர்களுக்கு செய்து கொடுக்கப்படும். பூபதி ஆட்ஸ். தொடர்பு முகவரி: டிக்கர் வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வரவிக் கூப்பாரி அருகாமையில்) (எ 3845)

31-ம் நாள் நினைவு

அமரர் பொ. தங்கராசா

மண்ணில்: 1935-04-21
விண்ணில்: 1994-01-22

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள்

மழுனு ஏரி,
செட்டியார் தோட்டம்,
நல்லூர். (ஏ-3847)

விவேகானந்தர் விஜயிசை

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ணமட பரதன் பிரிவு மாணவன் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை காவியம் விஜயிசை மூலம் வழங்கி வருகிறார்கள்.

இவ் விசேஷ இன்று 22ம் திகதி வண்ணை. வைத்தீஸ்வராக்கல்லூரியிலும், 23ம் திகதி திருநெல்வேலி முத்துத் தம்பிமகாவித்தியாலயத்திலும் பகலி ஆகியோர் பயிற்சிக்கலாசாலையிலும், 28ம் திகதி கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், மாச்சி 2ம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், மாச்சி 4-ம் திகதி யாழ் வேம்படி கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. கி.பி.

படை சூடு சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

அரசலிக்கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி வேலணைக் கரையோரத்தில் நின்றிருந்த இராணுவத் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதில் கடற்தொழிலுக்கு சென்ற சிறுவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த சந்நாசாமி காந்தன் (வயது 13) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுள்ளார். (கி)

இளம் கலைஞர் மன்றம்
14 - வது
இசைவிழா

இடம்: **கலா மண்டபம்**
சண்டநாதர் வீதி, நல்லூர்.

11ம் நாள்

22-2-94 செவ்வாய்க்கிழமை

திருநெல்வேலி
ஜெகன் வர்த்தக நிலைய ஆதரவில்

காலை 4-00 — 5-00 மங்கள இசை

நாதஸ்வரம்:	தவில்:
கே. ராமதாஸ்	வைதீகு கே. பழனிமலை
எஸ். சதிரமலை	பி. பஞ்சமூர்த்தி
	பி. பால நந்தீஸ்வரன்

5-00 — 5-10 மிருதங்க இசை

ம. தவேந்திரன்	ம. தனேந்திரன்
ம. குலேந்திரன்	ம. லோகேந்திரன்

5-10 — 5-25 பாட்டு

பி. குமுதினி	எஸ். அன்புச்செல்வி	பாட்டு
கே. சஜினி	எம். ஜனனி	
ச. அமிழ்தினி	கே. பரணவதரி	
பி. சங்கீதா	வீ. சாந்தி	
ஏ. சுந்தரவதனி	கே. ப்ரதீபா	
பி. மதுரா		

பி. ரேணுகா	— வயலின்
ரி. தயேசதநாயகம்	— மிருதங்கம்

5-30 — 5-45 வீணை, வயலினிசை

எஸ். பவதாரிணி	வீணை
ஜே. அமுதா	
எஸ். கானப்ரியா	
ஏ. சரிஷினி	
ந. அபிராமி	
எஸ். சுகந்தி	

பி. ரதீருபன்	— மிருதங்கம்

5-45 — 6-15 பாட்டு

கே. நீதிகதி	— பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி	— வயலின்
கே. ஆதவன்	— மிருதங்கம்

6-15 — 7-00 பாட்டு

மேரி சரோஜா ஜஸ்டின்	— பாட்டு
பாலயலட்சுமி நடராஜா	— வயலின்
எஸ். துவாரராஜா	— மிருதங்கம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்

திரு. சி. ஜெயசீலன்
(ஜெகன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி)

திரு. பி. செந்தில்
(குமரன் ரெக்கோர்டிங்ஸ்)

திரு. தனபாலசிங்கம்
(அம்பாலி வர்த்தக நிலையம்)

திரு. வ. மகேஸ்வரன் (நியூ சுபமாலா)

அருள் உரை: கிஷ்ரீ ப. மனோகர குருக்கள்
(பிரதமகுரு சிவன் கோவில், வல்வெட்டித்துறை

தலைவர்: எஸ். நரேந்திரராஜா
(மிச்சார பொறியியலாளர்)

பிரதம விருந்தினர்:
எம். ராமதாஸ்
(மரமத்துப் பொறியியலாளர்)

சிறப்பு விருந்தினர்
பி. தயாராஜன்
(மரமத்துப் பொறியியலாளர்)

7-30 — 8 30 இசைக்கச்சேரி

மொன் ஸ்ரீ வாமதேவன்	— பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன்	— வயலின்
எம். கிரம்பரநாதன்	— மிருதங்கம்

8-30 — 9-30 பரதநாட்டியம்

"கிரகசக்தி சங்கீத நாத்தமூலய மரணவிலை"
தயாரிப்பு: புனிதமுமாரி ஏரம்பமூர்த்தி
விமலகுமாரி ஸ்ரீ ரவிகுலன்

வாழ்த்துவோர்:

ஸ்ரீ நதியா ஜுவல்லர்ஸ்
2 ஜி., கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ 3826)

பலாலி முகாமிலிருந்து கடுமை ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு ஏழாலை வடக்கு, மயிலணிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கரவெட்டி பகுதி இராணுவ முகாமில் இருந்து புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப் பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து ஏழாலைப் பகுதி மக்கள் இரவோடு இரவாக இடம் பெயர்ந்து சென்றனர். —கி

தந்தையின் கத்தி வெட்டுக்கு மகன் இலக்கானார்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தான் வெளிநாடு வந்த பணியில் இம்முறை மகன் வெளிநாடு காரணத்தால் ஆத்திரமடைந்த தந்தை, மகனை கத்தியால் வெட்டியதாகவும், மகன் வயிற்றுப் பகுதிகளில் படுகாயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவன், ஈவினையில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற சம்பவத்தில் மகனான அப்பன் தர்மலிங்கம் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். —சி

யாழ். நகரில் விரைவில் விடுமுறைச் சந்தை

(யாழ்ப்பாணம்)

தொழில் புரிவோரின் நன்மை கருதி யாழ். நகரில் விடுமுறைச்சந்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான சகல வேலைகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். நகரில் அரச மற்றும் தனியார் வர்த்தக ஸ்தாபனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் நலனைக்கருதி இச் சந்தை யாழ். மாநகரசபையால் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சந்தை ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் சகல விடுமுறை தினங்களிலும் இயங்கும். இச்சந்தை மின்சார நிலையவீதியில் மாநகரசபை வளவில் அமைக்கப்பட்டுள்ளது

இன்னும் சில தினங்களில் மக்கள் பாவனைக்காக இது திறந்து வைக்கப்படும். 162-கி

யன்மிகு

கித்த மருத்துவ கண்காட்சி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் நேற்று ஆரம்பமான சித்தமருத்துவ மாணவர்களின் கண்காட்சியில் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் பயன் தரக்கூடிய அம்சங்கள் காணப்படுகின்றன. அவற்றில் உள்ள சில பிரிவுகள் வருமாறு:

உடற்கூறுகள் — Anatomy: இந்தப் பகுதியில் உடலின் அமைப்பு பற்றிய சகல விபரங்களும் காணப்படுவதுடன் மனித உடலின் பகுதிகள் மக்கள் பார்வையிடக்கூடிய முறையில் வெட்டி சீர் செய்து வைக்கப்பட்டுள்ளன.

உடற்தொழிலியல் Physiology: இப் பகுதியில் உடலின் தொழில்கள் மிகவும் தெளிவாக எடுத்து விளக்கப்படுகின்றன. அத்துடன் நுணுக்குகாட்டி மூலம் சரீரத்தின் கலன்கள் காட்டப்படுகின்றன. மற்றும் ஒருவருடைய இரத்த நிறமி, இரத்த அமுக்கம், நிறை, உயரம் ஆகியவையும் கணிப்பீடு செய்யப்படுகின்றது

மூலிகை விஞ்ஞானம்: இங்கு சுதேச வைத்தியத்தில் பாவிக்கப்படும் மூலிகைகள் அதன் செயற்பாடுகள் ஆய்வு செய்யப்பட்ட மூலிகைகள் மற்றும் சில நோய்களுக்கு பாவிக்கப்படும் மூலிகைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

ஔடத பரவியல்—Pharmacy: மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகள் காட்டப்படுவதுடன் மருந்து தயாரிப்பதற்கு உதவும் உபகரணங்கள் மற்றும் தற்கால, பழைய கால ஔடத தயாரிப்பு முறைகளும் காட்டப் படுகின்றது.

மாதர் நோய்கள், கற்பிணி, மருத்துவம், குழந்தை மருத்துவம்; மாதர் நோய்கள் கற்பிணிகளின் பராமரிப்பும் கற்பகால அசௌகரியங்களும், குழந்தைகளைப் பாதிக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும் நற்பழக்வழக்கங்களும் சித்தர்த்து காட்டப்படுகின்றது.

சமூக மருத்துவம்: சமூகத்தில் ஏற்படும் தொற்றுநோயாதிகள் தீயபழக்க வழக்கங்களால் ஏற்படும் பாதிப்புகள் அவற்றின் தடுப்பு மற்றும் நிவாரண முறைகள் கூறப்படுகின்றன.

மருத்துவம், பொதுவாக காணப்படும்நோய்களும் அதன் பக்கவிளைவுகளும், அபாயகரமான குறிகுணங்களும் கூறப்படுகின்றன.

மற்றும் பிணியியல், சட்ட மருத்துவம் நஞ்சியல் அறுவை மருத்துவம் மூலநூலான சட்டரீதியான மருத்துவத்தின் முக்கியத்துவமும் நஞ்சுண்ட ஒருவரின் முதலுதவிகளும் முறிவுகள் பற்றிய விளக்கமும் வீடுத்தோட்டம் என்பனவும் சிறப்புற விளக்கப்படுவதால் இக்கண்காட்சி பொது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். -சி

ஹெலி தாக்குதல்

(எழுதுமட்டுவாள்)

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று எழுதுமட்டுவாள், நாவலர்கோவில் வரைப் பகுதிகளை வட்டமிட்டு 50 கலிபர் தாக்குதலை நடத்தியது. —170

மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு யாழ் மாவட்ட மருந்தக்களஞ்சியப் பகுதியினர் இவ்வாரம் மருந்து வகைகளை விநியோகம் செய்துள்ளதைஅடுத்து இவ்வைத்தியசாலையில் நிலவிய மருந்துத் தட்டுப்பாடுநீக்கியுள்ளது. ஏற்பு நடுப்பு ஊசி மருந்துகளும் விநியோகிக்கப்பட்டுள்ளது. (72)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

மணிவாக்கு

விரயவாரம் (என்பது அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஏமாற்றுவேலை.

— நாமஸ் ஆல்வாஎடிசன்.

நமது நோக்கு

அவர்களுக்கும் புரிகிறதா?

இலங்கையில் இனச் சிக்கல் தீரும்வரை, மேற்கு நாடுகளில் தஞ்சம்கோரும் இலங்கையர்களுக்கு அந்நாட்டில் நுழைவு உரிமைச் சான்றிதழ் (விசா) வழங்க வேண்டும் என ஆங்கிலேக்கான ஐ. நா. தூதரகம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

இன்று இனச்சிக்கல் இலங்கை; தமிழர் பாதுகாப்பாக வாழ்கிறார்கள்; நாளைவிட் அனுப்புக் உணவோடு நிம்மதியாக வாழ்கிறார்கள்: ஜனநாயகத்தை பேணிக்காத்திடத் தேர்தலில் சுயமாகப் பங்குபற்றுகிறார்கள் என்றெல்லாம் அரசு வெளிநாடுகளில் தீவிரபிரசாரம் செய்கிறது.

இதில் மயங்கிய நாடுகள் யுத்தநிறுத்தம்செய்து தமிழர்களுக்கு நீதி வழங்கும்படி அழுத்தங்களைக் கொடுக்காது. தஞ்சம் கோரியோரைத் திருப்பி அனுப்ப எண்ணி வருகின்றன.

இந்த ரீதியில் தான், 1992 செப்ரெம்பர் மாதத்திற்குப் பின் தஞ்சம் கோரியோரைத் திருப்பி அனுப்பச் சுவிஸ் இலங்கை அரசோடு ஒப்பந்தம் செய்தது.

ஆனால், இங்குள்ள உண்மைநிலை என்ன? மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் நிலையிலா உள்ளார்கள்? மூச்சு விடுவதையே மறந்து விடுங்கள் என்றதானே எறிகணை வீச்சுகளும் குண்டுவீச்சுகளும் அச்சுறுத்துகின்றன?

ஒய்ந்திருந்த குண்டு வீசக் விமானங்கள் நமது அரக்கப்பணியை மீண்டும் ஆரம்பித்துள்ளன. ஒய்வு பெற்ற விமானப்படைத் தளபதி தனது இறுதிச் சேவைக்காலப் பகுதியில் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்திருந்தார்.

புதிய விமானப்படைத் தளபதி பதவிஏற்றுள்ளார் என்பதைக் வெடிகொளுத்தியா தெரிவித்தார்கள்? பதவி ஏற்றநாளிலேயே குண்டுவீசியல்லவா அறிவித்தார்கள்! செய்தி அறிவிப்பில் புதிய உத்தியா?

இது மாத்திரமா முப்படைகளின் உதவியுடன் வடக்கில் இராணுவத் தாக்குதல் தொடர்ந்தும் நடைபெறும் என இராணுவப் பேச்சாளர் நவின் அபேசேகர 'அன்பான' செய்தியை நயவோடு தந்திருக்கிறார்.

இந்தப் பின்னணியில், ஆகக்களுக்கான ஐ. நா. தூதரகம் உண்மைநிலை புரிந்து, கோரிக்கை விடுத்திருக்கிறது.

இலங்கை இராணுவத்தின் கொடுமைகள் தாங்காது, தஞ்சமென்று வந்தவர்களை, மனிதாபிமானத்துடன் நடாத்த மேற்கு நாடுகள் முன்வரவேண்டும்.

உலகில் இன்று 50 நாடுகளில் இன, மொழி, நிற சண்டைகள்

சர். செஞ். பிரதிநிதி கூறுகிறார்

(உடுவில்)

"சாதி, சமய இனச்சிக்கலால் உலக நாடுகளில் பலவற்றில் சண்டைகள் நடைபெற்றபோது உலக செஞ்சிலுவைச் சங்கம் பல உதவிகளை செய்துள்ளது. புத்தமதம், இஸ்லாம் மதம், சைவமதம் என்ற பாகுபாடின்றி எல்லா சமய சமூகத்தவர்களுக்கும் நடுநிலைமை நின்று நாம் சேவை யாற்ற வேண்டும். இனரீதியாக நடைபெறும் சண்டையினை நிறுத்த செஞ்சிலுவைச் சங்க மகாநாடுகளை கூட்டி தீர்மானங்கள் எடுத்து செயற்படவேண்டும்."

இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் யாழ். கிளையின் ஆனுசரணையுடன் வலிகாமம் வடக்கு பிரிவு நடாத்திய செஞ்சிலுவை சங்கஸ் தாபகர் ஹென்றி டுனாற் ஞாபகார்த்த விழாவில் சிறப்புரையாற்றிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண மதிவிடப் பிரதிநிதி திரு. செட்றிக் பிரஸா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழா சம்பந்தமாக வெளியிடப்பட்ட சிறப்பு மலரை வைத்திய கலாநிதி த. சிவராசா வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை பெற்றுக்கொண்ட சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ். பிரதிநிதி செட்றிக் பிரஸா தொடர்ந்து உரையாற்றியதாவது; உலகின் பலநாடுகளிலும் எமது சங்கம் 25 மில்லியன் நன்பர்களைக் கொண்டுள்ளது. அனர்த்தங்களை சுமுகமாக உருவாகிய இச்சங்கம் சண்டை காலத்தில் உதவுவதோடு நின்றிலாது, சமாதானம், ஆமைதி நிலவவும் பொதுமக்களுக்கு நன்மை செய்வதையும் நோக்கமாக கொண்டது. சண்டையில் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டும் என்பதையே எமது கொடி கின்னம் விளக்குகின்றன. சண்டையின் போது சுயாதீனத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். நடுநிலைநிற்க வேண்டும்.

உலக நாடுகளில் ஐம்பதுக்கு அதிகமான நாடுகளில் இன்று இன, மொழி, நிற சண்டைகள் இடம்பெறுகின்றன. அண்மையில் நாம் பக்கம் சாராது நடுநிலையில் செயற்படுகின்றோம். இரண்டாம் உலகயுத்தத்தின் பின் ஜெனீவாவில் நடைபெற்ற நான்கு மகாநாடுகளின் பின் பின்வரும் கருத்துக்கள் ஏற்கப்பட்டன.

★ சண்டைகளின்போது ஒருவரையொருவர் கொல்லக் கூடாது.

★ கட்டுப்பாடுகளை நடக்கும் சண்டையில் ஈடுபட்டவர்களை கரப்பாற்றுவது.

★ சண்டைக்காலத்தில்வரப் பட்டவர்களைக் காப்பாற்றுவது.

★ சண்டை காலத்தில் பொதுமக்களை காப்பாற்றுவது.

இவை ஏற்கப்பட்ட பின்னரும் பல சண்டைகளில் இறந்துள்ளார்கள், காயப்படுத்தப்பட்டுள்ளார்கள். இனரீதியான சண்டைகள் நடைபெறுகின்றன. இவற்றை தீர்க்கவும் மகாநாடுகள் கூட்டப்படவேண்டும்

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாநகர சபைக்க அதிபர் திரு. வ. மாணிக்கவாசகர் கூறியதாவது: மனித குலத்தை மேம்படுத்த முயன்ற மக்களை உலக மக்கள் மறக்கமாட்டார்கள். ஜெனீவாவில் இருந்து எமது மக்களுக்கு சேவை செய்ய வந்துள்ள இச்சங்கத்தினரை நாம் மறக்க முடியாது. செஞ்சிலுவைச்சங்கம் இலங்கையிடன் நான் கொழும்புடன் தொடர்பு கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியிருப்பேன் இச்சங்கத்தின் பணி சிறக்க வேண்டும் என்றார்.

பண்டிதை செல்வி தங்கமா அப்பாக்குட்டி பக்கங்களை வழங்கினார். (109-கி)

செப்ரிசிமியாவால் குழந்தைகள் மரணம்

(யாழ்ப்பாணம்

செப்ரிசிமியா நோயினால் பீடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இரு குழந்தைகள் அங்கு மரணமாயின,

நவாலி ஆதி முகாமைச் சேர்ந்த திருஞானம் குபிந்தினி வயது (1 1/2) என்ற பெண் குழந்தையும், உடுவில் ஆலடி முகாமைச் சேர்ந்த அலுசைநா சுரேந்திரா (வயது 4) என்ற இரு குழந்தைகளுமே மரணமாயின. நேற்றுமுன்தினம் ஒரு குழந்தையும் ஒரு இளம்பெண்ணும் இந்நோயினால் மரணமானார்கள். ■

இராசிபலன்

22 - 02 - 1994

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி 10)

ஏகாதசி த. ப. 11-48வரை. திருவாதிரை மு. ப. 8-47 வரை, இராகுகாலம் காலை 3-31 முதல் 5-01 வரை, எம கண்டம் நன்பகல் 11-01 முதல் 12-31 வரை (பிரம ஏகாதசி.

மேஷம்: களஞ்சிய நஷ்டம், தொழில் லாபம், வெளியூர் உதவி.

இடபம்: விரோத உணர்வு, மாமியார் முறை, பயண ஆலோசனை.

மிதுனம்: குடும்ப பகைமை ஆகலாம், வாக்கு வசீகரம், பெண் அறிவுரை.

கடகம்: காரிய வெற்றி, எதிர்பாராத செலவு, மனவேதனை.

சிங்கம்: வீடுகட்ட விருத்தியையம், சகோதர நன்மை, பணவரவு.

கன்னி: விரோத சிந்தனை, புதிய உறவு, அதிர்ஷ்டம்.

துலாம்: தொழில் நஷ்டம், மனப்பயம், உறவினர் துன்பம்.

விருச்சிகம்: புத்தி தடுமாற்றம், குடும்ப சிக்கல், அநாவசிய தலையீடு.

தனுசு: எதிர்பாராத வெற்றி, காரிய சித்தி, புத்திரர் பெருமை.

மகரம்: பழைய கடன்களுக்கு தெய்வீக சிந்தனை, பிதுர உபதிரவம்.

கும்பம்: வேலைப்பழு, வீடுகட்ட துவர், மனவேதனை.

மீனம்: வீண் பழி, அநாவசிய தொல்லை, ஆலால உணவு.

— ஜோஸ்யர்.

பாகிஸ்தானுக்கு ஆதரவு வழங்க இலங்கை அரசு மறுக்கும்?

(தொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் மாநாட்டில் காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியாவுக்கு எதிராக தீர்மானம் ஒன்றை கொண்டு வருவதற்காக இலங்கையின் ஆதரவை பாகிஸ்தான் கோரியுள்ளபோதிலும் இலங்கை இதற்கு ஆதரவு வழங்குவது சந்தேகமே என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையிலும் வேறுபல இடங்களிலும் காஷ்மீர் போன்று சண்டை நடைபெற்றுவரும் நிலையில் இத்தகைய தீர்மானம் ஒரு முன் உதாரணமாக அமைந்து விடுமோ என்பதால் இலங்கை பாகிஸ்தானின் தீர்மானத்தை ஆதரிப்பது சந்தேகமாயுள்ளதாம்.

இத்தீர்மானத்திற்கு ஆதரவு தரும்படி கோரி பாகிஸ்தான் பிரதமரின் விஷேட பிரதிநிதியான பாகிஸ்தானின் மேலதிக வெளியுறவு செயலர் ஜனாப் காலித்தவி ஜனாதிபதி விஜயதுங்காவிடம் பெனாஷிரின் செய்தியை அளித்ததுடன் சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடாத்தியதும் தெரிந்ததே. (கி)

சுத்தத்தை பேணும் ஆஸ்பத்திரியில் அசுத்தம்

(யாழ்ப்பாணம்)

சுத்தத்தை நூறு வீதமும் பேணவேண்டிய மக்களின் மிக முக்கியமான உரிமையாகும் வீதாபனமொன்றில் சுத்தம் பேணப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது. யாழ் வெலிங்டன் ஆஸ்பத்திரியே இந்நிலையில் உள்ளது.

நோயாளர்முதல் சுகாதார ஊழியர்களும் பாவிக்கும் குடிநீர்க் கிணறுகளில் காகம் ஒன்று இறந்து கடந்த மூன்று நாட்களாகக் காணப்படுகிறது. இதேபோல இன்னும் எத்தனையோ சிறு பிராணிகள் இதேபோல் இறந்து தண்ணீருடன் தண்ணீராக கலந்தே வருகிறது. இதை அக்கிணற்றுப் பகுதிக்கு பொறுப்பான எவருமே கவனிப்பதாகத் தெரியவில்லை.

இந்நீரையே அனைவரும் பருகிவருவது குறிப்பிடத்தக்கது. பலவேறு வகையான நோய்கள் பரவிவரும் இக்காலவேளையில் இவற்றை யெல்லாம் தடுக்கும் முயற்சிகள் எதுவும் எடுக்கப்படாதது கவலைக்குரியதே. —சி

இன்று

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடாத்தும் சாரணிய தந்தை பேடன் பவுல் நினைவுதின விழாவும், சிந்தனை நாள் தினமும் (இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. —72

0 0 0

(யாழ்ப்பாணம்)

சாரணர் கிளைச் சூழிடு விழாவும், பேடன் பவுல் தினமும் இன்று பகல் மகாஜனாக்கல்லூரியத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவிருக்கிறது. —170

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலதோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

முஸ்லிம் காங்கிரஸ் இனவாதக் கட்சி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இனவாதக்கட்சி அதன் செயல்களும் அவ்வாறே இருக்கிறது.

இவ்வாறு வர்த்தக,வாணிப துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்:

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர் அஷ்ரப்பும் இனவாத கருத்துக்களை வெளிவிட்டுவருவதுடன் செயற்படுத்தியும் வருகின்றனர். இதனால் முஸ்லிம் சமூகம் பல இன்னல்களை சந்திக்க வேண்டிவரும்எனவும் கூறினார்;

அமைச்சர் மன்சூருக்கு அஷ்ரப்பின் ஆதரவாளர் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது; (சி)

தமிழ் மண்பாடு இயக்க போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

28-12-1993இல் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடாத்திய பொது அறிவுப் போட்டி வரிசை (93) யின் முடிவுகள் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு

1ம் இடம்: செ- இந்திர மோகன் -யூனிகன் கல்லூரி

2ம் இடம், தி. பாலமுருகன் விக்ஞா கல்லி நிறுவனம்.

3ம் இடம் கி. குருபரன் - யாழ் இந்துக்கல்லூரி.

மேற்பிரிவு

1. ச இளபரதமூர்த்தி விக்ஞா கல்லி நிலையம்

2. ச. சஞ்சயன் - யூனிகன் கல்லூரி.

3. கி. வசீகரன் கிறிஸ்தவக் கல்லூரி கோப்பாய் -கி

தவக்கால நற்சிந்தனை

"உனக்கு அன்பு செய்வது போல் உன் அயலவர்களுக்கும் அன்பு செய்"

(லேவி: 19 : 18)

அன்பு என்பது தெய்வமானது அன்பே கடவுள். அன்பு உலகமகா சக்திகளுள் பெரியது என்பார்கள் "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்கிறதிருக்குறள். இறைவன், அனைத்திற்கும் மேலாய் கூறுவது. "உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்பதாகும் இதன் மூலம் அன்பின் இலக்கணத்தை மேன்மைப்படுத்துகிறார்.

-மோ. தாசீசியஸ்

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

பெண்கள், குழந்தைகள் உட்பட

கொள்கலனுக்குள் அகதிகள் மூச்சுத்திணறிய நிலையில் மீட்பு

சுவீடனில் சம்பவம்

(லண்டன்)

சுவீடன் துறைமுகத்தில் நின்றிருந்த நின்றபாரிய கப்பலின் கொள்கலன் ஒன்றிலிருந்து 64 வெளிநாட்டு அகதிகளை சாலும் தறுவாயிலிருந்து சுவீடன் பொலிஸார் காப்பாற்றியுள்ளர்.

இந்த அகதிகள் இக்கப்பலின் கொள்கலனில் 9 மணித்தியாலங்களுக்கு மேலாக மறைந்திருந்ததினால் மூச்சுத்திணறி இறக்கும் நிலை ஏற்பட்டபோது அதன் உள்ளேயிருந்த ஒரு சிறு பொலிஸ்களிடம் தமக்கு ஓசை எழுப்பியபோது துறைமுகத்துக்கு தெய்வாதீனமாக வந்த பொலிஸார் அதை கேட்கக் கூடியதாக இருந்தது.

பொலிஸார் உடனடியாக கப்பலின் மேற்தளத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த மேற்படி கொள்கலனை திறந்து பார்த்தபோது, 26 சிறுவர் உட்பட 64ஆண் பெண் வெளிநாட்டு அகதிகள் அதற்குள் இறக்கும் தறுவாயிலிருப்பதை கண்டார்கள்.

பொலிஸார் அவர்களுக்கு உடனடி சிகிச்சை அளித்ததைத் தொடர்ந்து அவர்கள் காப்பாற்றப்பட்டதாகவும், மிகவும் பசிக்கலையிலிருந்த அவர்கள் தாம் தலா 2500 அமெரிக்க டொலர்களை கப்பல் கப்டனிடம் வழங்கியதாகவும் பொலிஸாரிடம்தெரிவித்தனர்.

கப்பல் கப்டன் தற்போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-இ)

யுத்தம் முடிவுக்கு வராது அது வியாபாரமாகிவிட்டது!

— சந்திரிகா சாடல்

(தொழும்பு)

வடக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு ஒரு முடிவு ஏற்படாது போல தெரிகிறது. யுத்தத்தை ஒரு பிரிவினர் வியாபாரமாக மாற்றியிருப்பதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

தென்பகுதியில் தென்மாகாணசபை தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் பேசிய திருமதி குமாரணதுங்கா மேலும் கூறினார்வது:

வடக்கு-கிழக்கு யுத்தத்தை வியாபாரமாக பயன்படுத்திக் கொண்டவர்கள் பல பாரிய தேவையான சொத்துக்களை சேர்த்துக் கொண்டு விட்டனர்.

வடக்கில் இருப்பது பயங்கரவாதப் பிரச்னை என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தபோதிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு ஏதுவாக திறந்து விட்டிருப்பது ஏன்?

வடக்கு-கிழக்குப் பிரச்னை விவகாரத்தில் அரசு இரட்டைவேடம் போடுகிறது. இப்பிரச்னை நிலவிய இந்த யுத்தத்தை எவ்வாறு ஒரு முடிவுக்கு கொண்டுவரமுடியும்?

யுத்தத்தை வியாபாரமாக மாற்றியிருப்பதுடன் பாலஸ்தீன மாவீரர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அரசு அதன் ஆதரவாளர்களுக்கு வழங்கியிருக்கிறது.

இதன் மூலம் பொதுமக்கள் சூறையாடப்படுகின்றனர். வாழ்க்கைச் செலவைப் பொதுமக்கள் தாங்கமுடியாத நிலை இன்று ஏற்படுகிறது. சுமார் 16 ரூபாவுக்கு தரு விக்கப்படும் ஒரு கிலோ சீனி இங்கு 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இலங்கையில் 70 சத வீதமான குழந்தைகள் இன்று போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகிலேயே அதிக அமைச்சர்களைக் கொண்ட அரசு இலங்கையிலேயே தான் உள்ளது. இங்கே 84 அமைச்சர்கள் உள்ளனர். இவர்களுடைய உத்தியோகத்தர்கள், ஆதரவாளர்கள் மற்றும் யுத்தத்திற்கான செலவுகள் குறைக்கப்படுமானால், வாழ்க்கைச் செலவைப் பெருமளவு குறைக்கலாம் என்றார். -இ

வீரமணி கைது

(சென்னை)

திராவிடர் கழக பொதுச் செயலர் கி. வீரமணி உட்பட பெருமளவு தொண்டர்கள் நேற்று சென்னையில் கைது செய்யப்பட்டனர்.

மத்திய அரசு இந்தி மொழியை திணிப்பதாகவும் விலைவாசி உயர்வைக் கண்டித்தும் வீதிமறியல் போராட்டத்தில் திராவிடர்கழகத்தினர் ஈடுபட்டபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனராம். (க)

ஆனையிறவும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தும்.

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றிய தமது ஆலோசனைகளை விடுதலைப்புலிகள் இலங்கை நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. சீர்திருத்தத்திற்கு ஆலோசனைகள் சமர்ப்பிப்பதற்கான காலவரையறையை அரசு நீடித்தபோதிலும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

பேச்சுவார்த்தையில் என்னென்ன விடயங்கள் விவாதிக்கப்படவேண்டும், வார் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள் என்பதே அடிப்படையான விடயங்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (க - இ)

கிழக்கு தேர்தலில் போட்டியிடும்

எதிரணி வேட்பாளர்களுக்கு

பாதுகாப்பு வழங்க அரசு மறுப்பு

— சிறிமா குற்றச்சாட்டு

(தொழும்பு)

கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாளர் பிரசாரம் செய்வோருக்கும் பாதுகாப்பு வழங்க, அரசு மறுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளார். எனினும் இதற்குரிய தகுந்த பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அரசுத் தரப்பினர் கிழக்குத் தேர்தலுக்காக ஹெலிகொப்டர்களையும், அரசு வாகனங்களையும் பயன்படுத்திவருகின்றனர். எதிரணியினருக்குப் பாதுகாப்பு வழங்கப்படாத தால் அவர்கள் தமது தேர்தல் நடவடிக்கைகளைக் குறைக்கவேண்டிய சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் அவர் கூறினார்.

பல பகுதிகளில் புலிகளின் கிளர்ச்சி இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். -கி

இந்தியாவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இப்பிரச்னை பெரிதாகிவிட்டது.

மேலும் இரு நாடுகளையும் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (கே-இ

இலங்கையிடமிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக மீனவர் இலங்கைக் கடற்படையினரால் இவ்விதம் கொலைசெய்யப்படும், காயப்படுத்தப்படுவதும் சம்பந்தமாக பிரதமர் நரசிம்மராவ் ஸ்ரீலங்கா கடற்படை யினருக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமெனவும் தமிழக முதலமைச்சர் இந்தியப் பிரதமரைப் கேட்டுக்கொண்டுள்ளார். ()

அத்தியாவசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசகர் தெரிவித்தார்.

புலிகளின் ஊரடங்கு வாரஒலி க்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது: இருவாரங்களுக்கு முன்னர் மூன்று கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை நான் அனுப்பி வைத்தேன்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் கிறிஸ்டி சில்வாவுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

ஆனால் அத்தியாவசியப் பொருட்களுக்கும் கப்பல் கட்டணம் அறவிடுவது தொடர்பான அறிவுறுத்தல்களே அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடமிருந்து எனக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றார். ராவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்.

பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்து பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில், அப்பாவி மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்த இலங்கை அரசுடன் பேச்சு நடாத்தவேண்டுமென தான் பலமுறை மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களிற்கு தலா 10,000 ரூபா வீதமும் காயமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா வீதமும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார். (கி)

சாரணர் தாபகர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தின் யாழ் மாவட்டக்கிளை ஸ்தாபகர் பேடன் பவல் பிரவு தினம், இன்று யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கப்பல் மூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முற்பணம் செலுத்த முடியாதுள்ளது என்பதற்கான பல காரணங்கள் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படுத்தப்பட்டுள்ளன. எனவே திறைசேரி தான் இப்பணத்தை முற்பணமாக செலுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய நடவடிக்கை எடுக்கு மாறு தற்பொழுது கொழும்பில் நிற்கும் யாழ். திட்டப் பணிப்பாளர் கேட்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக என்ன முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை திட்டப் பணிப்பாளர் யாழ் திரும்பியபின் அறிவிக்கப்படும். (162 - இ)

யாழ். குடாவுக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவுப் பாதையை திறப்பதற்கு தாம் அனுமதித்தால், இப்பாதையை இராணுவம் உடனடியாகப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தை கைப்பற்ற மெதுவாக முன்னேறிவிடும் என்று விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள்

ஆனால் யாழ்ப்பாணத்துக்கு இராணுவம் நுழைய வேண்டுமானால், எமக்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன.

கடந்த ஆண்டு இராணுவத்துக்கு பல பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும், இவ்வருடம், வடபகுதியில் உள்ள பல பகுதிகளை இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சி தொடர்ந்து நடைபெறும் என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். வி-இ)

பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

பெப்ரவரி மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்தன.

இதுடன் கடந்த ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய வரணவடமதிய உணவு முத்திரைகளும் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவம் மற்றும் செயலகத்திற்குத் தேவையான படிவங்களும் வந்தன. 71-162-இ

தேவாரம் மடுகாயம்

(சென்னை)

தமிழகக் காவல்துறையின் தலைமை இயக்குநர் நாயகம் திரு. டபிள்யு ஐ. தேவாரம் நேற்று மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் ஏற்பட்ட வியத்து ஒன்றில் பலத்த காயமடைந்தார். வாரச் சாரதி அவ்விடத்திலேயே உயிரிழந்துவிட்டார். -வ-இ

கோமாரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் வடபகுதி இராணுவத்தினருக்கு தேவையான 100 மெற்றிக் தொன் கிறகு மற்றும் உணவுப் பொருட்களும் அதிக எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுதினம் விவசாய கிழமை இக்கப்பல் பருத்தித்துறைத் துறைமுகம் வந்து சேருமென தெரிவிக்கப்படுகின்றது. 162-கி

பூநகரி விவகாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடிதுரையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அக்கடிதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் மாகாண சபையை ஆரம்பித்த வட்டியில் இருந்துகொண்டே தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அம்மாகாண சபைகள் அரசுக்கு எதிராக இயங்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இக்கூற்றானது மக்களின் விருப்பத்திற்கு எதிரானது என்றும் தென்மாகாண சபை விடயத்தில் அரசு நடந்துகொண்டதும் அதன் பலவீனத்தையே காட்டுகின்றது எனவும் அவர் தனது கடிதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

இந்திய மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகமீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டு வருவதைத்தடுத்து இலங்கையிலிருந்து கச்சதீவை மீட்டுப் பெறவேண்டுமென தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இப்போது தீவிர அக்கறை காட்டியுள்ளார்.

இப்பிரச்னை குறித்து பேசிய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கமிட்டி தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குறிப்பிடும்போது-

இலங்கை அரசு இந்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

1974 - ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கச்சதீவு பகுதி இலங்கைக்கு உரிமைப்பட்ட இடம். ஆனால் இந்திய மீனவர்கள் தங்கள் வலைகளை இங்கு உலர்த்தி இளைப்பாற அனுமதி வழங்கப்பட்டு இந்திய இலங்கை பாதுகாப்புப் படையின் கண்காணிப்பில் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கை அரசு ஒப்பந்தப்படி நடக்கவில்லை. ஆதலால் அ. தி. மு. க. அரசு இந்திய மீனவர்களது பாதுகாப்புக் கருதி கச்சதீவை திரும்ப எடுத்துக் கொள்ள இப்போது ஆர்வம் காட்டுகின்றது என தெரிவிக்கப்பட்டது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" விமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B